## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (09.12.2015 முதல் 13.12.2015 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை – 612 101**

போன் : 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881


===============================================================================

தேதி :08.12.15

### கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (04.12.2015 - 07.12.2015)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 61.4 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 27 – 29 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 22 – 24 |
| மேக மூட்டம் | 7 – 8 |
| ஈரப்பதம் (%) | 91 – 95 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 10 – 17 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 09/12/15 | தேதி-2 10/12/15 | தேதி-3 11/12/15 | தேதி-4 12/12/15 | தேதி-5 13/12/15 |
| மழை (மி.மீ) | 3 | 2 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 27 | 27 | 27 | 28 | 28 |
| குறைந்தபட்சவெப்பநிலை(டி.செ | 23 | 23 | 23 | 24 | 24 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 6 | 6 |
| ஈரப்பதம் (%) | 92 – 95 | 92 – 95 | 92 – 95 | 85 – 90 | 85 – 90 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணிக்கு) | 13 | 13 | 13 | 13 | 13 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

09.12.2015 முதல் 13.12.15 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 2 - 3 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**முக்கிய பயிர்: நெல்**

**சம்பா : தண்டு உருளும் பருவம் ; தாளடி: தூர் கட்டும் பருவம்**

- மழை நீர் சூழ்ந்துள்ள வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- சம்பா/தாளடி நெற்பயிரில ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் நீர் வடிந்த பின் அதனை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு 22 கிலோ யூரியா + ஜிப்சம் 18 கிலோ + வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து வயலில் இடவும்.
- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும் (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லது காப்பர் ஹைட்ராக்ஸைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**இயக்குநர்**